**PRESS NOTE**

On 17.11.2020 between 18.00 hour and 21.30 hour, a Surprise Check was conducted at the Office of the District Social Welfare Office at Nagapattinam, in Nagapattinam District along with the District Deputy Inspection Cell Officer Tr.K.Gajendran, Thanjavur regarding the allegations of collecting undue advantage from the Mukkiya Sevigas and Grama Seviga by the District Social Welfare Officer for approving marriage assistance Scheme applications submitted by the 11 Blocks Panchayat Union Mukkiya Seviga and Grama Seviga, of the Nagapattinam District. During the surprise check unaccounted money of Rs.44,500/- possessed by Tmt.C.Umaiyal, District Social Welfare Officer in her hand bag has been seized, which is purportedly bribe money obtained from the 11 Blocks Panchayat Union Mukkiya Seviga and Grama Seviga on 17.11.2020, for herself, for approving the marriage assistance scheme applications submitted by the 11 Blocks Panchayat Union Mukkiya Seviga and Grama Seviga of Nagapattinam District. The unaccounted money of Rs.44,500/- possessed for Tmt. C.Umaiyal was seized under proceedings cum Seizure mahazar.

In this connection based on the report of the Deputy Inspection Cell Officer a case in Nagapattinam V&AC Cr.No.05/2020 u/s 102 Cr.P.C. and u/s 7, 7-A of Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered on 18.11.2020 against the accused Tmt.C.Umaiyal,58/2020, D/o Chettyveeran, District Social Welfare Officer, District Social Welfare Office, Nagapattinam District

# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

நாகப்பட்டினம் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் ஒவ்வொரு மாதமும் 11 வட்டார ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சமூக நல விரிவாக்க அலுவலர்கள் மற்றும் மகளீர் ஊர்நல அலுவலர்கள் பரிந்துரை செய்து கொண்டுவரும் 5 வகை திருமண நிதியுதவி திட்டத்தின் விண்ணப்பங்களை நாகப்பட்டினம் மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.உமையாள் அவர்கள் பெற்று ஒப்புதல் வழங்க 11 வட்டார ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சமூகநல விரிவாக்க அலுவலர்கள் மற்றும் மகளீர் ஊர்நல அலுவலர்களிடம் திருமதி.உமையாள் அவர்கள் கையூட்டு கேட்டு பெறுவதாக நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவலின் பேரில் 17.11.2020 ஆம் தேதி மாலை சுமார் 18.00 மணிமுதல் **21.30** மணிவரை நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலகத்தை திரு.K.கஜேந்திரன், த/பெ.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் அவர்கள் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.M.அருள்பிரியா மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.C.உமையாள் அவர்களுக்கு சொந்தமான கருப்புகலர் ஹேண்ட் பேக்கில் தனித்தனியாக சுருட்டி சுருட்டி வைக்கப்பட்டிருந்த பணம் மொத்தம் ரூபாய் 44,500/- இருந்தது. மேற்படி பணம் பற்றி கேட்டபோது திருமதி.உமையாள் 11 வட்டார ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சமூக நல விரிவாக்க அலுவலர்கள் மற்றும் மகளீர் ஊர்நல அலுவலர்கள் ஆகியோர் **5** வகை திருமண நிதியுதவி திட்டத்திற்குரிய விண்ணப்பங்களை ஒப்புதல் செய்வதற்காக கொடுத்த பணம் என்று கூறினார். மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.உமையாள் அவர்கள் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்ற அடிப்படையில் **ரூபாய். 44,500/-** கைப்பற்றப்பட்டது.

மேற்படி திடீர் ஆய்வு குறித்து மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் அவர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் **18.11.2020** ஆம் தேதி **02.00** மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.**05/2020** ச/பி **102** கு.வி.மு.ச மற்றும் 7, 7-A Prevention of Corruption Act 1988, as amended by Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி திருமதி.உமையாள், வயது 58/2020, த/பெ செட்டிவீரன், மாவட்ட சமூகநலத்துறை அதிகாரி, மாவட்ட சமூகநலத்துறை அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம் அவர்கள் மீது வழக்குபதிவு செய்யப்பட்டது.